மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாநிலத் திட்டக் குழு நம்முடைய மாநிலத்திலுள்ள இயற்கைப் பொருள்கள், மூலதனம் பற்றியெல்லாம் ஆராய்ந்து தொழில் நுட்பப் பணியாளர்களால் சீர்தூக்கிப் பார்த்து எடுத்து வைக்கின்ற கருத்துக்களின் அடிப்படையில் அவைகளை எல்லாம் நல்ல முறையில் செயல்படுத்தி மத்திய அரசு உதவியை நாடுவோம். அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்று எடுத்துச் சொல்லுவதற்கு இப்போது என்னால் இயலாது. நாமே அவைகளில் எவற்றை எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்த பிறகுதான் சீர்தூக்கிப் பார்த்துச் செயல்படவேண்டும்.

DR. H. V. HANDE : May I know whether there is any proposal to link the State Planning Body with the Central Planning Body Is there going to be any co-ordination between the work of the State Planning Body and also the suggestions of the Central Planning Body? What are the terms of reference of the State Planning Body? What are the duties earmarked for it and where is its office? May I know further particulars from the Hon. Chief Minister?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இரண்டையும் இணைப்பது என்பது இயலாத காரியம். ஆகவே, இங்கு எடுக்கப்படுகின்ற முடிவுகளை இந்த அரசு சார்பில் எப்படி நிறைவேற்றுவது என்பதற்கான வழிவகைகளை நாடி அறிந்து அவற்றைச் செயல்படுத்துவதற்கு மத்தியில் இருக்கும் திட்டக் குழுவினுடைய துணையை நாடுவதுதான் முறையாக இருக்கும். இல்லாவிட்டால் ஒன்றுக்கொன்று போட்டி என்ற முறையில் ஆகிவிடக் கூடும். அதற்குப் போட்டியாக இல்லாமல் அந்த வகையில் வேண்டுமானால் இணைந்து செயல்படும் என்பதை நான் கூறமுடியும். இதற்கான அலுவலகங்கள் எல்லாம் இப்போது இங்கிருக்கும் எழிலகத்தில் அலுவலாளர்கள் பணி புரியத் தொடங்கிவிட்டார்கள்.

திரு. சொ. காவேரிமணியம் : இம் மாநிலக் குழுவில் மாவட்ட நிர்வாக அதிகாரிகள் இடம் பெறுகிறார்களா அல்லது அவர்களுடைய பரிந்துரைகள் கேட்கப்படுகின்றனவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாவட்ட அளவில் எந்த அதிகாரிகளும் இடம் பெறவில்லை. திட்டக் குழு தன்னுடைய ஆராய்ச்சியைப் பரவலாக நடத்துகிற நேரத்தில் அவர்களுடைய துணையை நாடிப் பெறும்.

இராஜமன்னர் குழுவுக்கான செலவு.

* 548 வினு—திரு. ஒ. என். சுந்தரம் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மத்திய–மாநில உறவுப் பற்றிய இராஜமன்னர் குழுவின் பணி தொடர்பாக இதுவரையில் ஆன மொத்தச் செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 1—5—1971-ஆம் நாள் வரை பணியிலிருந்த பணியாளர் சம்பளம் முதலிய செலவு உட்பட மத்திய–மாநில உறவு ஆய்வுக்குழுப்பணி தொடர்பாக ஏற்பட்டுள்ள மொத்தச் செலவு ரூ. 2,13,678-25 ஆகும்.

திரு. இ. எஸ். தியாகராஜன் : ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகளை ஆராய அரசியல் தலைவர்களின் கூட்டம் ஏதாவது கூட்ட உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தப் பரிந்துரைகளை ஒவ்வொரு கட்சியினுடைய தலைவர்களும் அவர்களுடைய கட்சி மட்டத்தில் ஆராய்ந்து தங்களுடைய கருத்துக்களை அறிவிப்பார்கள் என்று அரசு நம்புகிறது.

திரு. சோ. கருணைநாதன் : ராஜமன்னார் குழுவில் எவ்வளவு பேர் இடம் பெற்றுள்ளார்கள்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது ஏற்கனவே நடந்து முடிந்த கதை. இது விடியற்காலையில் சீதைக்கு ராமன் என்ன உறவு என்று கேட்பது போல் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகளைச் சட்டசபையில் விவாதிக்க ஒரு நாள் ஒதுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அடுத்த கூட்டத் தொடரில் அதற்கு ஒருநாள் ஒதுக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ராஜமன்னார் அறிக்கையின்மீது இந்த அரசாங்கத்தின் மேல்நடவடிக்கை என்ன என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதைத்தான் இப்போதே சொன்னேன். ஒவ்வொரு கட்சியின் தலைவர்களும் அந்தந்தக் கட்சி மட்டத்தில் ஆராய்ந்து அந்தக் கருத்துக்களை எல்லாம் இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்ல இருக்கிறார்கள். அவைகளுக்குப் பிறகுதான் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுப்பது என்பதைப்பற்றி முடிவு செய்யும்.

திரு. எம். சுரேந்திரன் : அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் ஒரு நாள் ஒதுக்குவதாகக் கூறினார்கள். அப்படி ஒதுக்குகிறபோது, முழுவதையும் அரசாங்கம் ஆராய்ந்து அரசாங்கக் கருத்தை தனியாகத் தயாரித்து இந்தச் சபையில் வைக்கப்படுமா அல்லது ஒட்டு மொத்தமாக விவாதிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அரசாங்கத்திற்கும் சில கருத்துக்கள் இதிலே உண்டு. அரசாங்கத்தின் கருத்துக்களை மாத்திரம் வலியுறுத்தாமல் இங்குள்ள அனைத்துக் கட்சிகள் தலைவர்களுடையவும், உறுப்பினர்களுடையவும் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு ஜனநாயக மரபில் இந்த அரசாங்கம் வழக்கம்போல் செயல்படும்.

Transfer of Capital of Tamil Nadu to Tiruchirappalli.

* 549 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have received any request during the end of June, 1970 from any person or body to transfer the Capital of Tamil Nadu to Tiruchirappalli,